சாரல் : 42
மார்ச் 2025

since 1994

சாரல்

தமிழ்த்துறை
கொங்கு கலை அறிவியல் கல்லூரி
(தன்னாட்சி)
நஞ்சனாபுரம், ஈரோடு - 638 107.
தொலைபேசி : 0424 - 2339933, 98427 26267

KONGU
Assuring the Best

ஆலோசகர்

திரு. பொ.தே. தங்கவேல்

தாளாளர்

ஆசிரியர்

முனைவர் ஹ. வாசுதேவன்

முதல்வர்

முனைவர் ப. தினகரன்

துறைத்தலைவர்

தமிழ்த்துறை

பொறுப்பாசிரியர்

திருமதி கா. அகல்யா ஆனந்தி

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை

முன்னுரை

நமது கல்லூரியின் தமிழ்த்துறை சார்பில் வெளிவரும் '**சாரல்**' இதழ் தங்களது கரங்களில் புதுப்பொலிவோடு தவழ்ந்து கொண்டிருக்கிறது. இதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறோம். மாணவ, மாணவியர்களின் படைப்பாற்றலையும் கற்பனை வளத்தையும் மேம்படுத்தும் களமாக '**சாரல்**' விளங்குகிறது எனில் அது மிகையல்ல.

'**சாரல்**' இதழின் செம்மைக்கும் சிறப்பிற்கும் வளர்ச்சிக்கும் சீரிய கருத்துகள் பல வழங்கி இதழ் வெளிவரத் தூண்டுகோலாக இருக்கும் தாளாளர், திகொங்கு வேளாளர் இன்ஸ்ட்டியூட் ஆப் டெக்னாலஜி டிரஸ்ட் அறங்காவலர்கள் மற்றும் கல்லூரி முதல்வர் உள்ளிட்ட அனைவருக்கும் எங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பதிப்புக்குழு

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னோர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ் !

- தண்டியலங்காரம்

கவிதைகள்

முயற்சி

இயலும் என்று முயற்சித்தாலே
இமயம் கூட சிறு தூசி ஆகும்.
சோர்வின்றி குறிக்கோளுடன் முயற்சித்தாலே
சோதனைகளும் சாதனை ஆகும்.
அயராது அலைகள் போல முயற்சித்தாலே
அதிக பாராட்டுகள் குவியத் தொடங்கும்.
போராட முயற்சித்தாலே
போதும் என்றளவு வெற்றி பெற முடியும்.
ஆர்வத்துடன் முயற்சித்தாலே
ஆர்ப்பரிக்க முடியாத உயரத்தை எட்டலாம்.
எழுந்து நடக்க முயற்சித்தாலே
எரிமலையும் வழி விடும்.
முடியும் என்று முயற்சித்தாலே
முட்களும் பூவாகும்.
வலை பின்னும் சிலந்தி போல முயற்சித்தாலே
வசந்தம் வாழ்க்கையில் வீசத் தொடங்கும்
தோல்வி எனும் களை நீக்க முயற்சித்தாலே
வெற்றி எனும் நல்மணி கிடைக்கும்.
ஓயாமல் உழைக்க முயற்சித்தாலே
ஓராயிரம் மாற்றங்கள் உருவாகும்.
விடாமுயற்சியுடன் முயற்சித்தாலே
விடாமல் வெற்றிக்கனியை எட்டலாம்.
முடியும் வரை முயற்சித்தாலே
முயற்சி திருவினையாக்கும்.

முனைவர். **ர. புஷ்பலதா**
இணைப்பேராசிரியர்
இளநிலை கணினி அறிவியல் துறை

நிலா

வெள்ளை மலர்
மொட்டொன்று காம்பொடிந்து
மலராமல் அந்தரத்தில் !
நிலா !!

செவ்வானம்

யாரது ?
வானத்தில் மருதாணி
பூசியது ?

தீவிரவாதம்

இது மனித நேயத்தின்
நினைவஞ்சலி !

பனித்துளி

அதிகாலை சிந்திய
கண்ணீர் !

அமாவாசை

வெள்ளை அழகிக்கு
வைத்த திருஷ்டிப் பொட்டு !

மலை

யாரது ?
பூமிக்கு கிரீடம்
சூட்டியது ? !

ந. ரேணுகா
உதவிப்பேராசிரியர்
ஆங்கிலத் துறை

தோழன்

வகுப்பறையில் சீருடை தொகுப்பாய்
வகுக்கப்படாத இருவிடலை பாடங்கள்
அகநானூறு ஒரு பாடமாகவும்
புறநானூறு ஒரு பாடமாகவும்
புத்தகமென ஒட்டிக் கொண்டன
அந்நாளும் நாழிகையும் சத்தியமாய் மறக்க இயலாது
ஆனால்
நான் ஒரு பாதியாகவும்
என்னில் நண்பனாய்
நீ ஒரு பாதியாகவும் உள்ளாய்,
இதனை மரணம் வரை
என் மணம்
மறக்காது தோழா...

தனிமையில் நட்பு

எத்தனை தோழமைகளுடன் உரையாடினாலும்
இத்தனிமையில் நெஞ்சம் என்ற ஒன்று
தனிமையல்லால் கதைக்க எதிர்ப்பார்ப்பது
பாசமான என் தோழனிடம் தான்

ச. சந்தோஷ்
மூன்றாமாண்டு இளங்கலை
தமிழ் இலக்கியம்

பயணம் தொடரா கனவு

அறிவு பொங்கி விளையாட
அன்பு ஒன்று கூடி ஆடல் பாட
ஆசைகள் அளவறியாமலும்
தேடிய நிலையறியாமலும் ஓட
தேனருவி போல
தேர் கூட்டத்தில் நிற்கிறேன்
என்னை நானே அறிந்து கொள்ள
அறியா விடையறியாமல்
ஆராய்ச்சிகள் பலவிதம் கொள்ள
பயிற்சியின் பாதையில்
அனுபவத்தைத் தேடி ஓடுகிறேன்
இது என் கண் துடைப்பா? இல்லை
என் கண்ணீரின் துடைப்பா?
பயணம் தொடராத கனவு?

மறக்குமா நெஞ்சம்

மெய் மறந்து சிரிக்கிறேன்
மெய்சிலிர்க்க சிரிக்கிறேன்
அட்சய பாத்திரம் போல
அளவறியா சிரிப்புகள்
என் கவலைகள் மறந்து போனது
நீங்கா நினைவுகள் நீங்காமல் பதிந்து போனது
ஆசிரியரின் அன்பை பாடவா?
நட்புகளின் அரவணைப்பைக் கூறவா?
இமயமலையின் உச்சி போல
ஒவ்வொரு வகுப்பறையும்
என் நினைவுகளை எதிரொலிக்கின்றன.
பிரிய மனம் இல்லாமல்
பிரியமுடன் வெளியேறிய காலம்
வெற்றிப் பாதையில் என்னை
செதுக்கி அனுப்பிய என் எதிர்காலம்
அதுவே என் மூன்றாண்டு பொற்காலம்
கனவா? நினைவா?
என எனைத் திரும்பிப் பார்க்க வைத்த
என் கல்லூரிக் காலம் ! மறக்குமா நெஞ்சம் ?

ச. ஹரிபிரசாத்
இரண்டாமாண்டு
வணிக மற்றும் கணினி
பயன்பாட்டியல் துறை

சாரல்

இடி மின்னலுடன் வரும் உன் ஓசை அழகு
நீ வருவதைக் கண்டு அசையும் பூக்கள் அழகு
தேன் சொட்டுகளாய் வரும் உன் சாரல் அழகு
அச்சாரலில் வண்ணத்துப் பூச்சிபோல் துள்ளித்திரியும்
என் மனம் அழகு
இத்தனை அழகையும் அள்ளிக் கொடுத்த
மழையே நீ பேரழகு.

பூஜீதாஸ்ரீ
முதலாமாண்டு
நிர்மச் செயலியல் துறை

கண்ணீர்

புலரும் விடியலில்
உன்னை புதைத்தவள்
நான் !

மௌனமான இரவைக்கூட
ரணமாய் மாற்றியது
நீ !!

தனிமை

மௌனத்தின் முடிவு
அழுகையின்
தொடக்கம் வரை..!

ச. தீபிகா
முதலாமாண்டு
கணிதவியல் துறை

தாயின் கருவறை

கல்லறையில் உறங்குகிறாள்
தாலாட்டு பாடியவள் அமைதியாக
அவள் குரல் ஒலிக்காது
தொந்தரவு செய்யாது
அக்கறையுடன் மீண்டும் அரவணைக்க
அவள் கைகள் நம்மை தொடராது
உன் மேல் அன்பு வைக்கும் ஒருத்தி
முதலும், முடிவும் அவள் தான்
அவளது முத்தத்தை உன் நெற்றியில்
வாங்கிக்கொள் முதலும் முடிவும் நீயே !
ஆனவை ஆனவை
உன் எச்சிலை அவள் அன்போடு ஏற்பாள்...
நடக்க பழகி கொடுத்தவளும்
வாழக் கற்றுக் கொடுத்தவளும் அவளே
பொய் கதைகளும், போலிக் கிழவியும்
முடிந்தன.
நின்றாள் உடம்பு வேக
பானையின் முன்னால்
அவள் எண்ணம் முழுவதும்
உன்பசி ஆற்றவே
தினம் பக்கத்தில் உறங்கினாள்
எந்த வலியும் உணர்த்தாமல்
கடவுள் என்றும் உனது அருகே
ஒரு பெண்ணின் உருவில்
அர்த்தமில்லாத வாழ்க்கை
பெற்ற பிள்ளைகள் தான் அவளுக்கு ஒரே சுவாசம்
கவலைகள் நாளை தொடர
இன்றே கண் மூடியது.

பிரேம் வெள்ளைசாமி
மூன்றாமாண்டு
உயிர்வேதியியல் துறை

கட்டுரை

ஆசைகள் அற்றுப்போதல்

பூக்களை விற்று மாதம் தோறும் குறைந்தபட்ச வருவாய் ஈட்டும் பூக்காரிக்கு என்ன கிடைத்து விடப்போகிறது. ஆசை கொண்டு அவளால் அவள் தலையில் அரை ஜான் பூவைச் சூட முடியுமா? இல்லை அந்தப் பணத்தில் அவள் விரும்பியதை வாங்கித்தான் கொள்ள முடியுமா? வாழ்க்கை முழுவதும் தன் உழைப்பை மட்டும் நம்பியிருக்கும் கூலி வேலைக்காரனை யார் மதிக்கிறார்கள் ஒரு கார்ப்ரேட் முதலாளி தனக்குத் தேவையான மனித சக்தியை உறிஞ்சு கொண்டு அதற்கு இணையான பண மதிப்பை ஒருபோதும் வழங்குவதில்லை. உண்மைக்குத் துணை நிற்பவர்களையும் விலை கொடுத்து தன் பக்கம் இழுத்துக்கொள்கிறார்கள்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது மனிதன் பணத்தை இயக்குகிறான் என்பதற்கு மாறாக பணம் தான் மனிதனை இயக்குகிறது என்ற சிந்தனையை ஆழ் மனதில் நுழைத்து விடுகிறார்கள்.

நீங்கள் நினைக்கலாம் ஏழைகள் ஏழைகளாக இருப்பதற்குப் பணக்காரர்களைக் காரணம் சொல்லி என்ன செய்யமுடியும் என்று ஒரு பொருளின் விலையை ஏற்றி இலாபத்திற்கு மேலாக வருவாய் ஈட்டுவதற்கு அவர்கள் கையாளும் உத்திகள் அதாவது அனைவரையும் கவரும் வகையில் அவர்கள் செய்யும் விளம்பரங்கள் ஒரு மனிதனின் உணர்வுகளையும் ஆசைகளையும் தூண்டும் வகையில் இருக்கின்றன. இவ்வாறான பொருட்கள் இல்லையென்றால் நீ வாழும் வாழ்க்கைக்கு அர்த்தமில்லை என சிந்திக்கும் வகையில் சக மனிதனின் மனதை மாற்றிவிட்டார்கள். அவைகளை அடையும் பொருட்டு வாழ்வில் துளியளவும் நிம்மதியும் மகிழ்ச்சியும் இல்லாமல் கால்களில் சக்கரங்களைக் கட்டிக்கொண்டு

ஓடிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு மனிதனின் தோற்றத்தையும் ஆடையையும் வைத்து அவனின் திறமையை நிர்ணயம் செய்யும் முட்டாள்தனமான எண்ணம் இப்பிரபஞ்சத்தில் மட்டும் தான் உள்ளது.

தன் செல்லப்பிள்ளை ஆசையோடு ஒன்றைக் கேட்டால் வேர்வைச் சொட்டப் பூரித்து நிற்பார் அந்த ஏழைத் தந்தை. விரும்பியதும் கிடைக்காமல் கிடைத்தும் நிலைக்காமல் ஒரு கட்டத்தில் அவன் வாழ்வில் அதிகபட்ச நன்மையாக அமைவது ஆசைகள் அற்றுப் போதல் என்ற நிலை மட்டுமே.

மழை

பசியை மறுத்தவளானேன் மனம்
ஒரு குவளை தேநீர் போதும் என்றது
எட்டிப்பார்ப்பதில் மகிழ்ச்சியில்லை
மழைத்துளிகள் கன்னத்தில் முத்தமிட ஆசை
தட்டிப்பறிப்பது போல அம்மா மிரட்டுவாள்
சளிபிடிக்கும் என்று
அவர் நம் தோழனாயிற்றே (சளி)
ஒரு விருந்துகொடுத்தால் சென்று விடுவார் என்றேன்.
அம்மா சிரித்துவிட்டு சென்றுவிட்டார்.

இழப்பு / நிலா

உன்னை இழந்த பிறகுதான் தெரிகிறது,
சூரியனை இழந்த நிலவுபோல்
நான் ஒளி இல்லா நிலா என்று..

மழை

நவீன உலகில் நாடகமாடும்
நாகரிக மனிதனின்
நகரமயமான மாளிகையில்
ஈசலாய் பொழிகிறாய்
இயற்கைத் தாயின்
வயிற்றைக் கிழித்து
விற்பனைமயமாகும்
இந்நரகத்தில்(நகரம்)
அணைக்க (தடுப்பு) அணையின்றி
வெள்ளமாய்...
மறுபுறம்
இயந்திர உலகின்
இரைச்சலில்
இரை இறைந்து வாடி
அமைதித் துயில் கொள்ளும்
ஒட்டுக் குடிசைக்காரனின்
ஈரம் நிறைந்த நெஞ்சில்
ஈட்டியாய் பாய்கிறாய்.
மழை நீ வரமா ! சாபமா !

கு. பிறைமதி
இரண்டாமாண்டு வணிகவியல்
மற்றும் கணக்குப் பதிவியல் துறை

அம்மா

ஈராயிரம் இரைச்சலிலும்
என் மௌனம் மட்டும் கேட்டுவிடுகிறது - என்
கோபக்காரத் தோழிக்கு !

போலி நண்பர்கள்

ஏமாற்றங்கள் தந்த அழகிய பரிசினை
துரோகம் என்னும் வாழ்த்து மடலுடன்
தந்தன உறவுகள்..

சு. யமுனபிரியா
இரண்டாமாண்டு உயிர்
வேதியியல் துறை

தொழுது படித்திடு

தொழுது படித்திடுங்கள் மாணவர்களே !
தொழுது படித்திடுங்கள் !
கடவுளை எவ்வாறு மன உருக்கத்துடன்
தொழுதல் செய்வோமோ அது போலவே
படிப்பையும் தொழுது படித்திடு !
பாடப் புத்தகத்தின் தொடக்கத்தில்
கடவுள் வாழ்த்து இருப்பது போல்
நீ படிக்கும் முன் தொழுது படித்திடு !
சிந்தனையின் ஊற்றாக இருக்கும் படிப்பை தொழுது படித்திடு !
நிமிர்ந்த நடையையும்,
நேர்கொண்ட பார்வையையும்,
கம்பீரத்தையும் கொடுக்கும் படிப்பைத் தொழுது படித்திடு !
தன்னம்பிக்கையைத் தரும் படிப்பினைத் தொழுது படித்திடு !
மன நிம்மதியைத் தேடித் தரும் படிப்பைத் தொழுது படித்திடு !
மரியாதையின் தொடக்கமான படிப்பு எனும் வைரத்தைத்
தொழுது படித்திடு !
அறிவாற்றலைப் பெருக்கும் கல்வியைத் தொழுது படித்திடு !
உற்றார், உறவினர் பாராட்டும் நற்குணங்களைச் சொல்லித்தரும்
படிப்பினைத் தொழுது படித்திடு!
நான் படிக்கவில்லை என்றாலும் என் பிள்ளை
படிக்கவேண்டும் என நினைத்துப் பெற்றோரான
தெய்வங்கள் தரும் அமிர்தமான படிப்பைத்
தொழுது படித்திடு !
நிரந்தரமில்லா வாழ்க்கையில் நிரந்தரமான
படிப்பைத் தொழுது படித்திடு !
துன்பத்தில் இருக்கும் போது இன்பத்தை வழங்கும் கல்வியைத்
தொழுது படித்திடு !

வறுமையில் வாடினாலும் உன் வாழ்விற்கு வெளிச்சம்
தரும் விளக்கான படிப்பைத் தொழுது படித்திடு !
உன் விடாமுயற்சியினை விஸ்வரூபமாக மாற்றும்
கல்வியைத் தொழுது படித்திடு !
இன்றைய இளைஞர்களை நாளைய வரலாறாக மாற்றும்
படிப்பினைத் தொழுது படித்திடு !
இறப்பின் இறுதி நொடியிலும் படித்துக்கொண்டே
இறந்த மகான்களை ஈன்றெடுத்த
தாயான படிப்பினைத் தொழுது படித்திடு !

கு. வெண்ணிலா
இரண்டாம் ஆண்டு வணிகவியல்
வங்கி மற்றும் காப்பீடுத்துறை

காலம்

அவன் ஓடிக்கொண்டிருந்தான்
நானும் அவனுடன் இணைந்தேன் !
சற்று நிற்கச்சொன்னேன்
அவன் மறுத்தான் !
ஓட்டத்தைத் தொடர்ந்தேன்
நான் அழைக்காதபோது !
ஆமையாக ஓடினான்
நான் அழைத்தபோது !
மின்னலாகப் பறந்தான்
நான் சோர்ந்து நின்றேன்
அவன் நிற்கவில்லை !

சு.க. சபரி சந்திரன்
இரண்டாம் ஆண்டு
உளவியல் துறை

இணையம்

தொலைதூரம் இணைக்க தொலைதொடர்பு - மேலும்,
நெடுந்தூரம் கடந்த வலைதளம், காணாததைக்
காணும் அளவு தொழில்நுட்பம், கண்டங்களைத்
தாண்டி ஒளிக்கும் காணொளி, இவையிருந்தும்
நெருங்கி இருப்போரிடம் முகம்காண இயலவில்லை
நேருக்கு நேர் அமர்ந்து உண்ணத் தோணவில்லை
நேரம் இன்று யாருக்காகவும் நிற்பதில்லை
மனஅமைதி யாருக்கும் சொந்தமில்லை !

பா.ஜோ. குருஷங்கர்
இரண்டாம் ஆண்டு கணினி அறிவியல்
மற்றும் தகவல் பகுப்பாய்வுத்துறை

வந்தே மாதரம் என்போம்

வந்தே மாதரம் என்போம் நாம்,
மண்ணின் மணம் கமழ்ந்து வாழ்வோம் நாம்
காட்டில் மிதந்து ஓடும் நதி
காக்கலாம் புனிதமாய் அதை நாமே
வந்தே மாதரம் ஒலிக்கட்டுமே,
வானம் முழுக்க ஒலிக்கட்டுமே,
மெய்ப்பொருள் என்ன? எனக் கேட்போருக்கு,
தேசத்தையே உறுதிபடக் கூறுவோம் நாம்
வந்தே மாதரம் எனச் சொல்லி,
தேசத்தின் பெருமையை போற்றுவோம்
உழைத்தாலே ஊதியம் என
உறுதி படக்கூறும் வீரத்தாயே
சிந்தனையில் முழுக்க தேசப்பற்றை வைத்து
வந்தே மாதரம் சொல்வோம் நாமே
மாவீரராக எழுவோம் நாமே !!

ஈ. காவியசந்தோசி
இரண்டாம் ஆண்டு
ஆங்கில இலக்கியம்

தந்தையும் மகனும்

மரபின் வேர்கள் தந்தையின் உள்ளத்தில்
மலர்கிறது அவை மகனின் உள்ளரங்கத்தில்
தந்தைக் காட்டும் ஒழுக்கம்
மகனின் வாழ்வின் அடித்தளம் !

தந்தையின் வார்த்தை நீராய் சினக்கும்,
மகனின் நெஞ்சில் அது நெறியாய் விளக்கும்,
தந்தைத் தூணாக வேராய் நிற்க,
மகன் கிளையாக நிழலாக வளர்க !

மண்ணின் மணமும் மூதோர் வழியும்,
தந்தையின் வாக்கினில் தலைமையைப் பொழியும்,
தந்தைக் காட்டும் ஒளியின் வழி
மகன் நடக்கும் விடியலின் வழி !

காலம் மறந்தாலும் திரிந்தாலும்,
மரபின் பாதை தொடரும் நிழலாகும்
தோன்றிய மண்ணில் செழித்திடும் முறை,
தந்தை மகன் மரபின் பெருமை நிறை !

மரபின் சுவடு
தந்தை எழுதி வைத்தார்,
மகன் உதிர்த்து நின்றார்.

ஹைக்கூ

சிறிதும் கர்வமில்லாத
அறிவுப் பெட்டகம்
"**புத்தகம்**"

காற்றின் உதவியால்
அந்தரத்தில் ஆனந்தக்கூத்து
"**பட்டம்**"

இலட்சியத்தை வைத்து
இலட்சங்களாக உருவெடுத்தது
"**நூலகம்**"

தவழ்ந்து வந்து
கரையோடு காதல் கொண்டது
"**கடலலை**"

வரைந்த கோலத்தை
அழிக்க மனமின்றி
அமைதியாய் சென்றது
"**கருமேகம்**"

மக்களின் உரிமை
மக்களிடமே விற்கப்படுகிறது
"**அரசியல்**"

காதலின் வலி
காதலனுக்கு மட்டுமல்ல
கவிஞனுக்கும் தெரிகிறது
"**கவிதையில்**"

சதிக்குக் கால் முளைத்து சாதியானது

மறைந்ததை மறக்க நினைப்பதற்குள்
மதியின் மகிமையால்
மானமும் களைகிறது
ஒற்றைக் காலால் !

சதியுடைமையில் மதி இழந்து
சாவினைத் தேடிய சமூகம்
இன்று சாதியைத் தூக்கித் திரிகிறது
ஒற்றைக் காலால் !

மருத்துவத்தின் மகிமையை
மதத்தினால் மாற்ற
உடன்பட்டது
ஒற்றைக் கால்தான் !

சதி செய்து முடிப்பதைக்
கால் முளைத்து உயரிய
காலங்கள் வந்தது
ஒற்றைக் காலால் !

கருத்தாகப் பார்த்தவர்களைக்
கருப்பாகப் பார்த்து
இயங்கிக் கொண்டிருக்கிறோம்
ஒற்றைக் காலால் !

சதுப்பு நிலத்தைச்
சாதி நிலமாக மாற்றியது
இந்த ஒற்றைக் கால் !

நிலவின் உருவம்
வளர்கிறது என்பதை
வளர்பிறையில் அறிந்த சமூகம்
சவுக்கடியில் தேய்கிறது
ஒற்றைக் காலால் !

சதியில் இறங்கிய பெண்களைக்
கால் முளைத்து உருவாக்கிச்
சாதியை நிறுத்தினார்கள்
ஒற்றைக் காலால் !

மதிகெட்ட உலகத்தை
மாரால் உதைப்பதை விட்டு
சதிக்கெட்டு கால்முளைத்துச்
சாதியானது !

சாகசம் புரிந்த
தலைமுறைகளுக்கு இடையில்
சாதியைப் புரிந்து
சாக்கடைகளில்
வீழ்வது ஏன்?

மாற்றத்தின் வழியை
மாறாமல் காக்க
சதியானது கால்
முளைக்காமல் விகுதியாகவே
இருந்திடலாம் !

வெ.க.வெற்றிவேல்
மூன்றாம் ஆண்டு தமிழ் இலக்கியம்

அம்மா

அன்பின் அதிசயம் நீ
ஆற்றலின் உருவம் நீ
இல்லத்தின் அரசி நீ
ஈடுபாடு கொண்டவள் நீ
உண்மையின் உழைப்பு நீ
ஊக்கத்தின் உருவம் நீ
எப்போதும் சிறந்தவள் நீ
ஏழையாக இருப்பவள் நீ ஏக்கம் கொண்டவள் நீ
ஐம்புலத்தையும் அடக்கக் கூடியவள் நீ
ஒட்டுமொத்த ஆளுமை கொண்டவள் நீ
ஓயாமல் உழைப்பவள் நீ
ஔவையின் எழுத்து நீ

தன்னம்பிக்கை

இலக்கை நோக்கி நீ செல்லும் போது
சிலர் உன்னை மிதிப்பார்கள்; உன் மீது
சுமை ஏற்றுவார்கள் சூழ்நிலையால்
ஒருபுறம் நீ செல்லும் பாதையில்
தடங்களை ஏற்படுத்துவார்கள்; தடைகள்
ஆயிரம் வரும் ஆனால் அதை உடைத்து
எறிந்து நீ செல்லும் இலக்கை நோக்கி
சென்று கொண்டே இருந்தாய் என்றால்
உன் வெற்றிப் பாதை
உனக்காக உருவாகும்

பகை

தந்திரம் வாய்ந்தது நரி என்று
நினைக்கிறார்கள் ஆனால் அதைவிட
தந்திரக்காரர்கள் உன்னைச் சுற்றி
அதிகமாக உள்ளார்; அவர்களிடம் நீ
ஜாக்கிரதியாக இருந்து கொள் கண்
சிமிட்டும் நேரத்தில் உன் காலை வாரி விடுவார்கள்.

படைப்பின் மகிமை

படைத்தவன் ஆண்டவனாக இருந்தாலும்
அந்த ஆண்டவனுக்கே மணி முடி
சூடும் அதிகாரம் மனிதனுக்குத் தான்

கே. கருப்பசாமி
மூன்றாம் ஆண்டு தமிழ் இலக்கியம்

பொது அறிவு

விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியர் - **ராகேஷ் ஷர்மா**

தயான் சந்த் அவர்களின் பிறந்த நாள் தேசிய விளையாட்டு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

பூகம்பத்தின் தாக்கத்தை அளவிடும் அலகு - **ரிக்டர்**

எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிய முதல் இந்திய பெண் - **பச்சேந்திரபாய்**

உலக வரலாற்றில் பழமையான மரமாக கருதப்படுவது **பேரீச்சை மரம்**

இந்தியாவின் மனித கம்ப்யூட்டர் என்று அழைக்கப்படுபவர் **சகுந்தலா தேவி**

மூன்று வயதில் 10 கி.மீ. நீந்தி சாதனை படைத்த தமிழக சிறுமி **யாமினி**

உலகில் உள்ள மிகப்பெரிய பறவை - **தீக்கோழி**

தன்னுடைய எடையைப் போல் இருபது மடங்கு எடையைத் தூக்கும் ஆற்றல் மிக்க உயிரினம் - **எறும்பு**

ரா.செ. ரூபஸ்ரீ
வணிகவியல் மற்றும் கணக்குப் பதிவியல் துறை

சிறுகதை

மனம் தேடும் மனிதம்

இருள் சூழ்ந்த நள்ளிரவில் பெண் ஒருத்தி தன் நடுக்கடல் பயணத்தில் கப்பல் முன்செல்ல நினைவை பின்செலுத்துகிறாள். அவளுக்குத் தற்போது சுமார் இருப்பத்தாறு வயதிருக்கும், நன்கு வளர்ந்து உப்புக்காற்றில் நடனமிடும் சுருண்ட கருங்கூந்தலும், கயல்விழிகளும் அன்றைய பௌர்ணமி இரவில் அவளின் கடந்தகால நிகழ்வுகளை நினைவுப்படுத்துவதாக அமைந்து அவளை தன் பாட்டியின் வீட்டிற்கு அழைத்துச் சென்றது.

அவள் சிறுவயதிலிருந்தபோது தன் பாட்டியுடன் இருந்த நாட்கள்தான் அதிகம், ஒரு நாள் அவன் தன் பாட்டியிடம் கேட்கிறாள். பாட்டி இங்க வானத்துல நிலா தெரியிற மாதிரி கடலிலும் நிலா தெரியுமா? பாட்டி உடனே, மம்...ம்ம... நானாவது கடலை பார்த்ததாவது, எங்கப்பனும் கூட்டிட்டுப் போல உங்கப்பனும் கூட்டிட்டுப் போல இந்த ஊரே கதினு இருந்துட்டேன். என்ன பாட்டி சொல்றீங்க அப்போ கடல பார்த்ததேயில்லையா? என்றாள் அம்மு. ஆமாம் என்னைக் கட்டிகிட்டவனாவது கூட்டிட்டு போவானு பார்த்தா அவனும் பாதியிலேயே போய் சேர்ந்துட்டான். அதுக்கு அப்புறம் எனக்கு மற்றது பற்றியெல்லாம் யோசிக்க நேரமில்லை. உங்க அப்பாவ படிக்க வைத்து ஒரு கல்யாணத்தப் பண்ணி பார்த்தேன். இப்ப நீயும் பிறந்திட்ட என்று அம்முவின் பாட்டி தன் நிலையை எடுத்துரைத்தாள். அம்மு சரி பாட்டி விடுங்க ! நான் பெரிய பிள்ளையாகி உங்கள கூட்டிட்டுப் போறேன் என்று கூற, தாத்தாவின் மறைவிற்கு பிறகு பாட்டி இச்சமூகத்தில் எதிர்கொண்ட சிக்கல்களை நினைத்துக் கொண்டிருக்கையில் அவள் உறங்கிவிட்டாள்.

திடீரென தட தட வென கதவைத் தட்டும் சத்தம் கேட்டு எழுந்து, தன்னுடைய கூந்தலை முடிந்துவிட்டு கதவைத் திறந்தாள். அவளுடைய தோழி தென்றலின் பதட்டம் நிரம்பிய கண்களைக் கண்டு, என்னடி, என்னாச்சு? இவ்வளோ பதட்டமா வந்திருக்க என்றாள். உடனே தென்றல்,

அம்மு, அங்கு இலங்கை படையினர் நம்முடைய தமிழக மீனவர்கள் படகில் துப்பாக்கி சூடு நடத்திவிட்டார்கள் என செய்தி வந்திருக்கிறது. அதுமட்டுமல்ல அதில் ஒருவருக்கு பலத்த காயம் ஏற்பட்டிருக்கிறதாம். மேலும் இருவரைச் சிறைப்பிடித்து சென்றுவிட்டாகளாம், வேகமாக வா, நாம் உடனே புறப்பட வேண்டும் என்றாள். இந்திய கடற்படையில் பணிபுரிந்து வரும் அம்முவும் தென்றலும் மற்றும் சில அதிகாரிகளும் இலங்கை கடற்படையினரைச் சந்திக்கத் தயாரானார்கள். சிறிதுநேரத்தில் இலங்கை கடற்படையினரைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினர். "தமிழக மீனவர்களை விட்டுவிடுங்கள் அதில் ஒருவர் மீது துப்பாக்கி சூடும் நடத்தியிருக்கிறீர்கள். அவர் உயிருக்கு ஏதேனும் ஆபத்து என்றால் நீங்கள் இந்திய அரசிற்குப் பதிலளித்தாக வேண்டும். உடனே அவர்களை விடுவித்துவிடுங்கள்" என்றனர். இந்த பேச்சுவார்த்தை பலமணிநேரம் தொடர்ந்த நிலையிலும் இலங்கை கடல் படையினர், தமிழக மீனவர்களை விடுவிடுக்க ஒப்புக் கொள்ளவில்லை. இலங்கை கடற்படையைச் சேர்ந்த ஒருவர், அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த தலைமை அதிகாரியின் காதில் ஏதோ குசு குசு என்றுப் பேச அவரும் மிகப்பெரிய வாக்குவாதம் ஏதுவுமின்றி தமிழக மீனவர்களை விடுவிக்க ஒப்புக்கொண்டார்.

உடனே இந்திய கடற்படை அவர்களை மீட்டு தேவையான முதலுதவிகளைச் செய்தது, சிறிது நேரத்தில் குண்டடிப்பட்ட மீனவர் மூச்சுவிட மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார். அதனைக் கண்ட அம்மு உடனே சென்று அவர் நெஞ்சை சில வினாடிகளுக்கு அமுத்திவிட்டு அவருக்கு தேவையான ஆக்ஸிஜன் வசதிகளைச் செய்து கொண்டிருந்தாள். அம்முவிற்கு மருத்துவ பணி கைவந்த கலை மேலும் அவள் துப்பாக்கி சுடுதல், எதிரியின் நோக்கம் அறிதல் ஆகியவற்றில் சிறந்து விளங்கினாள்.

அப்போது, அங்கிருந்த அதிகாரி ஒருவர், இலங்கைப் படை எவ்வளவு சாமர்த்தியமாக யோசித்து இருக்கிறது பார்த்தீர்களா? இவருக்கு மூச்சு திணரல் ஏற்பட்டதால் இன்னும் சில மணிநேரங்கள் மட்டுமே உயிருடன் இருப்பார் என்றறிந்து இவர்களை விடுவித்து விட்டது. என்றார். அம்மு இதையெல்லாம் யோசித்தக் கொண்டே சீக்கிரம் கரை ஒதுங்க வேண்டும், இவரை உடனே நகரத்திலுள்ள மருத்துவமனையில் சேர்க்க வேண்டும் என்றாள்.

அவர்கள் கரை ஒதுங்கியதும் காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வாகனமும், உற்றார் உறவினர்களும் கூடியிருந்தார்கள். இருப்பினும் அவர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியிலேயே உயிர் இறந்துவிட்டார்.

என்னுடைய குழந்தைகளை என்னால் பார்க்க இயலாதா? நான் இறந்துவிடுவேனா? நான் இல்லையேல் என் பிள்ளைகள் அனாதையாகி விடுவார்களே ! என் பிள்ளைகள் ! என் பிள்ளைகளைப் பார்த்துக் கொள்ளுங்கள் ! என்று குண்டடி பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவர் தன் கடைசி மூச்சு வெளிவரும் தருவாயில் அம்முவின் கைகளைப் பிடித்துக் கூறியது கண்ணீர் நிறைந்த சொற்களாய் அம்முவின் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

திடீரென உறக்கத்திலிருந்து விழித்த அம்மு, தான் இவ்வளவு நேரம் கண்டக் காட்சிகள் யாவும் கனவென அறிந்துத் திகைத்துப் போனாள். அவள் உறக்கத்தில் கண்ட கனவைப் போல் தமிழக மீனவர்களைக் காப்பற்றுவதும் கானல் நீராய் போய்விடுமா??

கு. பிறைமதி
வணிகவியல் மற்றும்
கணக்குப் பதிவியல் துறை

மன திருப்தி

ஒரு ஊரில் பணக்காரர் ஒருவர் இருந்தார். மிகவும் நல்லவர், அவருக்கு சில சுவாமி சிலைகள் பூஜைக்காக தேவைப்பட்டது. அதனால் அவர் பக்கத்து ஊரில் உள்ள சிற்பி ஒருவரைக் காண அந்த ஊருக்கு புறப்பட்டுச் சென்றார்.

வழியில் ஊரின் இயற்கை காட்சியைக் கண்டு இரசித்தவாறு சென்று கொண்டிருந்தார். அவர் தேடிச் சென்ற சிற்பியின் இல்லத்தைக்கண்டு உள்ளே சென்றார். சிற்பி உள்ளே சிலைகளைச் செதுக்கிக் கொண்டு இருந்தார். செல்வந்தரைக் கண்ட சிற்பி அவரை வரவேற்று நாற்காலியில் அமரச் சொல்லிவிட்டு தன் பணியை தொடர்ந்தார். சிற்பி தொடர்ந்து சிலைகளைச் செதுக்கிக்கொண்டு இருந்தார். பணக்காரர் அவர் செதுக்கும் சிலையையும் அருகில் கீழே கிடத்தி வைத்துள்ள சிலையையும் உற்று நோக்கினார். இரண்டுமே அம்மன் சிலை, இரண்டும் பார்க்க ஒரே மாதிரியாக இருந்தது. குழப்பம் அடைந்தவர் சிற்பியிடம் கேட்க ஆரம்பித்தார். ஒரே மாதிரியான இரண்டு சிலைகளை ஒரே கோவிலில் வைப்பார்களா? எதற்காக இரண்டு சிலைகள் என்று கேட்டார். சிற்பி அதற்கு கீழே உள்ள சிலை பழுதடைந்துள்ளது அதனால்தான் புதுசிலை செதுக்கிக் கொண்டு இருக்கிறேன் என்றார். பணக்காரர் சிலையை உற்று நோக்கினார் சிலையில் எந்தக் குறையும் இன்றி நன்றாக இருந்தது. குழப்பமடைந்த அவர் சிலை நன்றாகத்தானே இருக்கிறது என்றார். சிற்பி அதன் மூக்கில் ஒரு கீறல் விழுந்துள்ளது பாருங்கள் என்றார். அதுமிகவும் சிறியதாகத்தான் இருந்தது. உடனே அவர் சிற்பியிடம் இதை எங்கே வைக்கப் போகிறீர்கள் என்று கேட்டார், நாற்பது அடி கோபுரத்தில் இந்த சிலையை பிரதிஷ்டை செய்ய உள்ளனர் என்றார் சிற்பி, அவ்வளவு உயரத்தில் வைக்கப்போகும் சிலையில் இந்த சிறு கீறல் யாருக்கும் தெரியப் போவது

இல்லை, அதற்காகவா இன்னொரு சிலை செய்கிறீர்கள் என்று ஆச்சரியத்துடன் வினவினார். அதற்கு சிற்பி, எனக்கு அந்த சிலையில் உள்ள குறை தெரியும். அந்த வழியாக போகும் போதும் வரும்போதும் குறை உள்ள சிலையை நான் பிரதிஷ்டை செய்யக் காரணமாகி விட்டேனே என்ற எண்ணம் எனக்குள் எழும், அதை தவிர்க்கவே இந்த புதுசிலையை செய்கிறேன் என்றார். முழு மனதிருப்தியுடன் செய்கிறேன் என்றார்.

"அடுத்தவர் பாராட்டுக்காக நாம்

எந்த வேலையையும் செய்யக்கூடாது

நம் மனதிருப்திக்காகவே நாம்

எந்த வேலையையும் செய்ய வேண்டும் "

முனைவர். **ர. புஷ்பலதா**
இணைப்பேராசிரியர்
இளநிலை கணினி அறிவியல் துறை

சம்ஸ்கிருதப் பெயர்களும் – அர்த்தங்களும்
(Sanskrit Names and Meanings)

Dr.R. குமாரசுவாமி
தலைவர், **KVIT Trust**

- **சங்கீதா (SANGEETA) = சம் (sam) + கீதா (geeta)**
  சம் = சிறந்த, உயர்ந்த, together
  கீதா = பாடல்
  உயர்ந்த/சிறந்த பொருளை (கடவுள்) குறித்த பாடல், இசைக் கருவிகளுடன் கூடிய கச்சேரி.

- **தினகரன் (DINAKARAN) = சூரியன்**
  தின (dina) + கரன் (karan)
  தின = நாள் + கரன் = உருவாக்குபவர், கதிர்கள்
  பகலை உருவாக்குபவர்.

- **திவாகரன் (DIVAKARAN) = சூரியன்**
  திவா (diva) + கரன் (karan)
  திவா = நாள் + கரன் = உண்டாக்குபவர், doer
  பகலை உண்டாக்குபவர். Day that which shine

- **பிரபாகரன் (PRABHAKARAN) = சூரியன்**
  பிரபா (prabha) + கரன் (karan)
  பிரபா = ஒளி + கரன் = உண்டாக்குபவர்
  ஒளியை உண்டாக்குபவர், ஒளியைக் கொண்டுவருபவர் ஒளிக்குக் காரணமானவர்.

- **சுரேந்தின் (SURENDRAN) = இந்திரன்**
  சுர (sura) + இந்திரன் (indran)
  சுர = தேவர்கள் + இந்திரன் = தலைவன்
  தேவர்களின் தலைவன்.

- **நவநீதன் (NAVANEETHAN) = கிருஷ்ணன்**
  நவ (nava) + நீதம் (neetham)
  நவ = புதியது fresh / new + நீதம் = எடுக்கப்பட்டது
  (புதியதாக எடுக்கப்பட்ட வெண்ணெய்)
  எப்பொழுதுப் புத்துணர்ச்சியுடன் இருப்பவர்
  Everfresh, Newness.

- **மோகன் (MOHAN) = கிருஷ்ணன்**
  மோகம் = மயக்கம்,வசீகரம்,கவர்ச்சி,மாயை,குழப்பம்
  (பகவான் கிருஷ்ணரின் அடைமொழிகள்)
  மனதை மயக்குபவர், கவர்ச்சிகரமானவர், வசீகரிப்பவர்.
  All Attractive, Attract any one towards him.

- **மோகன்குமார் (MOHANKUMAR) = கிருஷ்ணரின் குழந்தை**
  மோகன் = கிருஷ்ணன் (வசீகரன், ஈர்ப்பவன்)
  குமார் = மகன், இளைஞன்
  கவர்ச்சிமிக்க, மனதை மயக்கும் இளைஞன்
  பகவான் கிருஷ்ணரின் மகன்கள் = பிரத்யும்னன்,
  சாம்பன், விஜய், அனிருத்தன் ext.

- **தீரன் (DHEERAN) = அறிவினால் மகிழ்ந்திருப்பவன்**
  தீ (Dhee) + ர (ra)
  தீ = அறிவு (Wisdom) + ர = மகிழ்ந்திருப்பவன்
  திறமையானவன், மனஉறுதிபடைத்தவன், Achiever.

- **காங்கேயன் (KANGEYAN) = முருகன், பீஷ்மர்**
  கங்கையின் மகன்

- **கபிலன், கபில் (KABILAN, KABIL) = விநாயகர், விஷ்ணு**
  அறிவுத்திறம் வாய்ந்தவர், உறுதியானவர்,
  கபில நிறம் = பொன்னிறம் கலந்த கருமை,Golden block
  கார்மேகத்தின் இடையேயுள்ள மின்னலின் நிறம்
  Clever, Capable, Strong, Great person

- **கார்த்திகேயன் / கார்த்தி (KARTHIKEYAN) = முருகன்**
  (கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவர்)
  சூரபத்மனை அழிப்பதற்காக சிவனரின்
  நெற்றிக்கண்களில் இருந்து ஆறு தீப்பொறிகள்
  தோன்றி, அக்னி பகவானால் சரவணப் பொய்கைக்குக்
  கொண்டு செல்லப்பட்டு, ஆறு அழகிய குழந்தைகளாக
  வடிவம் பெற்று. ஆறு கார்த்திகைப் பெண்களால்
  பாலூட்டி வளர்க்கப்பட்டு, பார்வதி தேவியால்
  ஒரே உடலாகவும் ஆறு தலைகளாகவும்
  வடிவம் பெற்றவர்.

- **பிரபு (PRABHU) = அனைத்திலும் உயர்ந்தவர்,**
  ஆட்சி புரிபவர், சிறந்து விளங்குபவர், வலிமையானர்,
  எஜமானர், நித்தியமானவர், பாதுகாப்பவர்.
  ப்ர (pra) + பூ (bhu)
  ப்ர = சிறந்த + **பூ** = தலைவன், பூமி, Lord, Master
  (சிவன், விஷ்ணு மற்றும் பிறதெய்வங்களையும்
  குறிக்கும் ஒரு உயர்வான சொல்)

- **தர்ஷன், தர்ஷிணி (DARSHAN, DARSHINI)**
  அன்புடனும், கருணையுடனும், பிரியமுடனும்
  பார்ப்பவர். தெய்வீகப் பார்வை உடையவர்
  Drus = பார்த்தல், to see

- **ஜகந்நாதன் (JAGANNATHAN) = விஷ்ணு**
  ஜகத் (jagath) + நாதன் (nathan)
  ஜகத் = உலகம் (தோன்றி மறைவது)
  நாதன் = தலைவன்
  தோன்றி மறைகின்ற உலகத்தின் தலைவன்.

- **விஸ்வநாதன் (VISWANATHAN) = சிவபெருமான்**
  விஸ்வ (visva) + நாதன் (nathan)
  விஸ்வ = உலகம்(விதவிதமாகக் காட்சியளிப்பது)
  நாதன் = தலைவன்
  விதவிதமாகக் காட்சியளிக்கும் உலகத்தின் தலைவன்.

- **லோகநாதன் (LOGANATHAN) = விஷ்ணு**
  லோக (lokah) + நாதன் (nathan)
  லோக = பார்க்கப்படுவது + நாதன் = தலைவன்
  பார்க்கப்படுகின்றன உலகத்தின் தலைவன்
  உலகத்தை அடக்கி ஆள்பவர், விசாலமான கொண்டவர்
  மக்களால் வேண்டப்படுபவர்.

- **விக்னேஷ், விக்னேஸ்வரன் = விநாயகர்**
  VIGNESH, VIGNESHWARAN (Lord of obstacles)
  விக்ன (vigna) + ஈஸ்வர (ishvar)
  விக்ன = தடை, இடையூறு, சிக்கல், கஷ்டம்
  ஈஸ்வர் = தலைவர்
  செய்யத் தொடங்கும் காரியத்தில் தடையை
  ஏற்படுத்துவர். (ஒரு காரியத்தின் முடிவில் கெடுதல்
  வரும் என்றால், காரியத்தின் ஆரம்பத்திலேயே
  தடையை ஏற்படுத்தி நல்லது செய்பவர்)

  நம் பிரார்த்தனை கீழ்க்கண்டவாறு இருக்கவேண்டும்.
  இறைவா, எனக்கு நல்லது என்று தோன்றுகின்ற
  இந்தக் காரியத்தில் இறங்குகின்றேன். அது உனக்கு
  ஏற்புடையதாக இருந்தால் அனுக்கிரம் செய்.
  உனக்கு ஏற்புடையதாக இல்லையென்றால்
  ஆரம்பத்திலேயே தடையை ஏற்படுத்தி நிறுத்திவிடு.

- **பிரகாஷ் (PRAKASH)**
  ப்ர (pra) + காஷ் (kash)
  ப்ர = நன்கு + காஷ் = ஒளிரக்கூடிய, To shine
  பிரகாசமான ஒளி, நன்கு வெளிப்படுத்துபவர்
  The very best of something.

- **பிரசாத் (PRASAD) = ப்ர (pra) + சாத் (sad)**
  ப்ர = நன்கு + சாத் = அமைதி, தெளிவு, கருணை
  தூய்மை, மன அமைதி, நிம்மதி, திருப்தி, கருணை, தெளிவு, இரக்கம், தயவு போன்ற நல்ல குணங்கள் உள்ளவர். மன அழுக்கு / கெட்ட குணங்கள் இல்லாதவர். கடவுளுக்குப் படைக்கப்பட்டு புனிதப்படுத்தப்பட்ட உணவு.

- **ஆர்யா, ஆர்யன் (ARYA, ARYAN) = Gentleman, Civilized Person**
  சாஸ்த்திரம் படித்தவர், வைத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் ஆபத்துக் காலத்தில் அணுகி அறிவுரை கேட்டவேண்டுபவர்.
  Noble and Educated Person, Respectable / Excellent Man.

- **சங்கர் (SANKAR) = சிவபெருமான்**
  சம் (sam) + கர (kara)
  சம் = நன்மை, மங்களம் + கர = செய்பவர்
  நன்மையைச் செய்பவர், மங்களத்தைச் செய்பவர்.

- **கிஷோர் (KISHORE) = இளங்கன்று, இளைஞன்**
  பருவம் அடையாத, (15 வருடங்களுக்குக் கீழ் உள்ள பாலகன்)
  Cub, Young of any animal.

- **நந்த கிஷோர் (NANDA KISHORE) = கிருஷ்ணர்**
  (நந்தன் = கிருஷ்ணரின் வளர்ப்புத் தந்தை)
  நந்தகோபரின் மகன்

- **சந்திரன் (CHANDRAN)**
  Chand = ஒளி, ஒளி மிகுதல், Shining, to Propitiage
  நவகிரகங்களில் ஒருவர், திங்கட்கிழமை
  Chandra represent - mind’s nature
  God of vegetarians & medicinal herbs
  Fertility God (maternal life and giving creative energy)
  Handsome of all Gods.

* **சந்திர கிஷோர் (CHANDRA KISHORE)**
  சந்திர (chandra) + கிஷோர் (kishore)
  சந்திரனின் குழந்தைகள்
  புதன் (Merchury), வர்சஸ், அபிமன்யு ect..

* **விஷாகன், விஷாக் (VISHAKAN, VISHAK) = முருகன்**
  வி (vi) + சாக (sakha)
  வி = சிறந்த + சாக = கிளை/தோகைகளையுடைய
  சிறந்த, அழகான தோகைகளை உடைய மயில்வாகனன்
  விசாக நட்சத்திரம் (முருகனின் நட்சத்திரம்)

* **பிரதீபா (PRADEEPA) = பேரொளி, பேரறிவுப் பிரகாசம்**
  ப்ர (pra) + தீபா (deepa)
  ப்ர = சிறந்த, உயர்வான + தீபா = ஒளி, அறிவு
  Radiance, Wisdom, Enlightenment, Brilliance,
  (Pradeepa representing characters who bringing
  brightness hope and guidence to others).

* **பவித்ரா (PAVITHRA) = புனிதமானவள், தூய்மையானவள்**
  பாபமற்றவள், காப்பாற்றுபவள், துளசி.
  பூ + த்ரம் (**பூ** = தூய்மைப்படுத்துவது)

* **பைரவி (BHAIRANI) = பயமுறுத்துபவள் (துர்காதேவி)**
  பீரு = பயப்படும் தன்மை
  (தவறு செய்பவர்களை பயமுறுத்தித் திருத்துபவள்)

* **சிவரஞ்சனி (SIVARANJANI) = பார்வதி**
  சிவ (siva) + ரஞ்சனி (ranjani)
  சிவ = சிவன் + ரஞ்சனி = மகிழ்ச்சியைக் கொடுப்பவள்
  சிவபெருமானுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பவள்.
  (Sivaranjani signifies devotion and love towards divine
  and symbolizing grace and beauty).

- **பவானி (BHAVANI) = பார்வதி**
  பவன் (Bhavan) + ஆனி (Ani)
  பவன் = சிவபெருமான் + ஆனி = மனைவி
  சிவபெருமானின் மனைவி, உயிரைக் கொடுப்பவள், வாழ்வை அளிப்பவள், உயிர் சக்தியின் ஆரம்பம்.

  ஸம்ஸ்க்ருதத்தில் மனைவி / ஆணி (கூர்மையான சுவற்றில் அடிக்கும் ஆணி) இரண்டுக்கும் ஆனி என்ற சொல்லே வரும்.

- **இந்த்ராணி (INDRANI) = இந்திரனின் மனைவி**
  இந்த்ர + ஆனி
  இடது கண் பாப்பா (Pupil of (Lt) eye)

- **ரித்திகா (RITIKA) = அழகான மரபுகளைக் கொண்டவள்**
  ரித்தி (Riti) = முறையான, செழுமை, வழக்கம், உண்மையானவள், (Prosperity, Manner, Style, Way)
  பித்தளை

- **வித்யா (VIDYA) = சரஸ்வதி, துர்காதேவி**
  வித் (vid) = அறிவு, ஞானம், கல்வி
  தெளிவான/மேலான/மெய்யறிவு அறிவுடையவள்

- **சிந்து (SINDHU)** = **ஆறு, கடல்**
  சேர்த்துப்பிடித்தல், குலுங்குதல், ஓட்டம், ததும்புதல்
  Bind, Hold, to shake, Tremble

- **சிந்துஜா (SINDHUJA) = மஹாலக்ஷ்மி**
  சிந்து (sindhu) + ஜா (ja)
  சிந்து = ஆறு/கடல் ஜா = பிறத்தல், தோன்றுதல்
  ஆறு/கடலிருந்து தோன்றியது
  (தேவர்களும், அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த பொழுது மஹாலக்ஷ்மி தோன்றினாள்)
  உப்பு ect..

- **ஜயந்தி (JAYANTHI)** **ஜயா (jaya)** = வெற்றி
  வெற்றிகரமானவள், வெற்றியைத் தருபவள்
  (இந்திரனின் மகன் ஜயந்தன் - ஜயந்தனின் தங்கை ஜயந்தி)
  கடவுள் அவதாரங்கள், தெய்வீக புருஷர்கள் அவதரித்த நாள்

- **காஞ்சனா (KANCHANA) = தங்கம், ஒளிமயமானவள்**
  கஞ்ச் (kanc) = ஒளிர்வது, To Shine
  பளபளப்பு, பிணைப்பது, செல்வம், வளமை, சொத்து

- **நந்தினி (NANDINI) = மகிழ்ச்சியானவள்**
  நந்த் (nand) = மகிழ்ச்சி, Delight, Rejoice
  மகிழ்ச்சியை / விரும்பியதைக் கொடுப்பவள்.
  தேவலோக பசு காமதேனுவின் மகள் கணவனின் சகோதரி

- **ஷோபா, ஷோபனா (SHOBHA, SHOBHANA)**
  மிகவும் அழகானவள், அன்பானவள், மங்களமானவள், அதிர்ஷ்டசாலி, ஒளி பொருந்தியவள்
  Extremely Beautiful Handsom, Loveliness & Brilliant Character

- **ஆதி (AATHI) = கடவுள், முதன்மையானவர், உயர்வானவர் அடக்கி ஆள்பவர், தொடக்கம்**
  Superior, Best, Highter, Chief, Lord

ஆதி = மனநோய், வியாதி = உடல் நோய்
State of distress, anxiety, mental pain (or) agony

மனநோய், போர் (அ) விளையாட்டில் குற்றம் கூறுபவர்
ஆதி என்பது ஆண்கள்/பெண்கள் இருபாலருக்கும் வைக்கப்படுவதாலும், கடவுள், உயர்வனவர் என்ற உயர்ந்த பொருளிலும், மனநோய், குற்றம் கூறுபவர் என்று தாழ்ந்த பொருளில் வருவதாலும் இது தெளிவற்ற பெயர் (Ambiguous name) என்ற வகையில் வருகிறது.

- **அஜய் (AJAY) = விஷ்ணு**

  அ (a) + ஜய (jaya)

  அ = இல்லை + ஜய = வெற்றி

  மற்றவர்களால் வெற்றி கொள்ள முடியாதவன்

  Unconquered, Irresistable

- **தேவராஜ் (DEVARAJ) = இந்திரன்**

  தேவ (deva) + ராஜ் (raj)

  தேவ = தேவர்கள் + ராஜ் = தலைவன்

  தேவர்களின் தலைவன்

- **பாண்டியன் (PANDIYAN) = அறிவாளி, புத்திசாலி, ஞானி, சிறப்பு அறிவு உடையவர்**

  Panda = உயர் அறிவு, ஞானம்

- **ஆர்த்தி (AARTHI) = ஒளிபொருந்தியவள்**

  ஆ (aa) + ராத்ரி (ratri)

  ஆ = இல்லை + ராத்ரி = இரவு, இருள்

  இருள் விலகி ஒளி வருதல்

  கடவுள் வழிபாட்டில் தீபம் காட்டுதல்

- **ப்ரீத்தி (PREETI) = அன்பானவள், நேசத்துக்குரியவள்**

  ப்ரீ (pree) = அன்பு, நேசம், Affection, Love

  (Someone who brings joy and happiness).

- **அஸ்வத் (ASVATH) = அரசமரம், போதிமரம்**

  Banyan tree, King of trees (வ்ருக்ஷராஜா)

  Banyan tree is a symbol of enlightenment, wisdom, peace and spiritual path.

  Banyan tree is the national tree of india

  நம் பாரத நாட்டின் தேசிய மரம் - அரசமரம்.

- **மஞ்சுளா (MANJULA) = வசீகரமான அழகானவள், மகிழ்ச்சியானவள், மென்மையானவள்**
  இணக்கமாக மற்றவர்களுடன் ஒத்துப்போகும் சுபாவம் உள்ளவள்.
  இனிமையான குரல்வளம் கொண்டவள்
  Pleasant, Lovely, Beautiful, Sweet, Charming, Soft and Aggreable Person.

- **சினேகா (SNEHA) = அன்பானவள், பாசமானவள் ஒட்டிக்கொள்பவள்** (பிறர் மேல் உள்ள அன்பு மற்றும் பாசத்தால் அவர்களுடன் ஒட்டிக்கொள்பவள்)
  (This name often evokes a sense of warmth, comfort, tenderness, kindness and aftection).

- **மனோஜ் (MANOJ) = Born in the mind of imagination**
  காமதேவன், அழகானவர்,
  வசீகரமானவர், அன்பானவர்
  மன (mana) + ஜ (ja) = Mind Born
  மன = மனம் + ஜ = பிறப்பு = மனத்தால் பிறந்தவர்

ஓவியம்...



ப. லக்ஷனா

இரண்டாமாண்டு வணிக மேலாண்மை மற்றும் கணினி பயன்பாட்டியல்



பி.கே. நந்தினி

இளங்கலை

கணினி அறிவியல் துறை



எஸ். பரணி

முதலாமாண்டு வணிகவியல்

மற்றும் நிறுமச் செயலியல் துறை



எஸ். பொன் அபிஸ்ரீ
முதலாமாண்டு இளங்கலை
தகவல் தொழில்நுட்பவியல்

க. சசிகாஸ்ரீ
முதலாமாண்டு
வணிகவியல் துறை

முனைவர். ர. புஷ்பலதா
இணைப்பேராசிரியர், இளங்கலை
கணினி அறிவியல் துறை



வி.என். ரம்யா
இரண்டாமாண்டு வணிகவியல்
மற்றும் கணினி பயன்பாட்டுத்துறை

தா. சாருஸ்ரீ
முதலாமாண்டு வணிக மேலாண்மை
மற்றும் கணினி பயன்பாட்டுத்துறை

ஜெ. முத்துகோபிகா
முதலாமாண்டு வணிக மேலாண்மை
மற்றும் கணினி பயன்பாட்டுத்துறை



தா. சாருஸ்ரீ

முதலாமாண்டு
வணிக மேலாண்மை மற்றும்
கணினி பயன்பாட்டுத்துறை

பி.கே. நந்தினி

இரண்டாமாண்டு இளங்கலை
கணினி அறிவியல் துறை